**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 183/2017 | அரசு தரப்பு | அ.சா.3 |
| பெயர் | பாலகிருஷ்ணன் என்கிற பாலன் | வயது | |
| தகப்பனார் பெயர் | | முகவரி | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of June 2025.

(எதிரி நீதிமன்றத்தில் இன்று ஆஜர்)

முதல் விசாரணை

நான் வரதராஜபுரம், வரதராஜபுரம் மேடு, கதவு எண்.8, வடக்கு வீதி 2, கோயமுத்தூர் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இரண்டு சரக்கர வாகன பழுதுபார்க்கும் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் தற்பொழுது கதவு எண்.290, காமராஜர்ரோடு, வரதராஜபுரம் என்ற விலாத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தொழில் செய்து வருகிறேன். இதற்கு முன்பு இந்த வழக்கில் இறந்துபோன ராஜு என்பவருக்கு சொந்தமான இடத்தில் 5,6 வருடங்களாக மேற்சொன்ன தொழிலை செய்து வந்தேன். கடந்த 2009 ஆம் ஆண்டு மாதம் நினைவில்லை, 7 ஆம் தேதி ராஜு காணாமல் போய் விட்டார். ராஜுவின் இரண்டு பெண்களும் அவர்களது தந்தை காணாமல் போய் விட்டதாக என்னிடம் கூறினார்கள். நான் நான்கு பக்கம் தேடிப்பார்க்கலாம் என்று அவர்களிடம் கூறினேன். ராஜு எழுதியதாக சுமார் ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த கடிதத்தில் என்னை தேடவேண்டாம், நானே வந்து விடுவேன் என்று எழுதப்பட்டிருந்தது. அதை

நான் ராஜுவின் மகள்களிடமே கொடுத்து விட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம்தான் எனக்கு வந்ததாகும். அதன் அசல் ஏற்கனவே தாய்வழக்கான அமர்வு வழக்கு எண்.51/2012 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளதால் அதன் நகல் தற்போது அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ராஜுவின் இரண்டு மகள்கள் பெயர் தற்போது எனக்கு நினைவில்லை. பின்னர் அவர்களது தந்தையை அவினாசி அருகே யாரோ கொலை செய்து எரித்து போட்டிருப்பதாக என்னிடம் அவர்கள் கூறினார்கள். ராஜுவின் பெரிய மகள் தனது தந்தையை சொத்துக்காக கொலை செய்து விட்டார்கள் என்று கூறினார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ராஜுவுடன் வாடகை ஒப்பந்தம் எதுவும் போட்டுக் கொள்ளவில்லை. நான் ராஜுவுக்கு சொந்தமான இடத்தில் கடை எதுவும் நடத்தவில்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ராஜு இறந்த விவரம் எனக்கு எதுவும் நேரடியாகத் தெரியாது. நான் மாதாமாதம் எவ்வளவு ரூபாய் வாடகை கொடுக்கிறேன் என்று ஆவண ஆதாரம் எதையும் நான் போலீசார் விசாரணையின்பொழுது கொடுக்கவில்லை. நான் மாநகராட்சியில் தொழில் நடத்துவதற்கு அனுமதி எதுவும் பெற்றேனா என்று போலீசாரிடம் கூறவில்லை. தற்போது ஒர்க்ஷாப் தொழில் செய்து வருவதற்கு மாநகராட்சியில் தொழில் வரி எதுவும் நான் செலுத்தி வருகிறேனா என்றால், இல்லை. ராஜுவுக்கு சொந்தமான இடத்தில் நான் கடை நடத்தி வந்தேன் என்பதைக்

காட்டுவதற்கு ஆதாரமாக அந்த கடைக்கு நான் மின் கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரங்கள் எதையும் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. நான் வாடிக்கையாளர்களின் வாகனங்களுக்கு பொருட்கள் வாங்கியது சம்மந்தமாக ரசீதுகள் எதையேனும் சமர்ப்பித்துள்ளேனா என்றால், இல்லை. நான் ராஜுவுக்கு சொந்தமான இடத்தில் கடை நடத்தியதில்லை என்றும், வழக்கிற்காக கடை நடத்தியதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ராஜு பெயரில் வேறு யாரோ கடிதம் எழுதி அனுப்பியுள்ளார்கள். ஆனால் அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. 13-11-2009 அன்று ராஜுவின் மகளிடம் எனக்கு வந்த கடிதத்தை கொடுத்தேன். அ.த.சா.ஆ.3 ஆனது வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும், அவ்வாறான கடிதம் எதுவும் எனக்கு வரவில்லை என்றும், அதை நான் ராஜுவின் மகளிடம் கொடுக்கவுமில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கைப் பற்றி எதுவுமே தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ராஜுவிற்கு அப்பொழுது சுமார் 55 வயது இருக்கலாம்.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/பாலகிருஷ்ணன் என்கிற பாலன்

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.